பிரஞ்சுக் கேசு

பிரெஞ்சுப் பிரதேசங்களின் நியாயஸ்தலத்தால் காரைக்கால் முதல் கோர்ட் நீதிபதி செய்த தீர்ப்பின் வாசகமாவது.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத் தோராம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12ம் தேதி புதன் கிழமை காரைக்கால் முதல் கோர்ட் நீதிபதி மசியே கமாலெயும் கண்டனை முறையாகவும் கூடிய ஆய சபையார்.

ஒருபுறம் பொது நேத்தராணி அவர்களும்

மற்றொரு புறம்

1) ஒத்தாளம் (இந்திய தேசம்) புது காலனி தெருவில் குடியிருப்ப வர் கோவிந்தசாமி படையாச்சி மகன் 31 வயது மளிகை வியாபாரம் தங்கராசு.

2) இந்திய தேசம் புது காலனித் தெரு குடி மாரிமுத்து தேவர் மகன் 25 வயது கை நெசவுத் தொழில் மாணிக்கம்

3) இந்திய தேசம் சிவாமிமலை பள்ளிவாசல் தெரு குடி தாவுதுசா ராவுத்தர் மகன் 26 வயது பஸார்த் தொழில் கலந்தர் மைதீன் என்றும் ஐமேசம் என்று அழைக்கப்படும் அப்துல் காதர்.

4) இந்திய தேசம் மாயவரம் வடக்குச் சாவடி தெரு குடி ஜான் வெம்பளின் மகன் 28 வயதுள்ள கிராஜூயாதர்.

இந்த நாலு சாட்சிகளும் பொது நேத்தராணி செல்லியில் வழக்கு செய்ததும் வைத்திருந்தமை குற்றஞ் சாட்டப்பட்ட வெடிக்கள் பத்ம நாபன் வகையறாக்கள் மீது தொடரப்பட்ட வியாச்சியத்தில் சாட்சி களாக அழைக்கப்பட்டு இன்றைய ஆய சபைக்கு வராதிருக்கின் றனர்.

நீதியார்.

சட்டத்தின் அனுஷ்டானத்திற்குரிய பொது நேத்தராணியவர் வேண்டுகோள்களையும் கேட்டுக் கொண்டார்கள்.

நீதிக்கு ஆஜராகாத சாட்சிகளுக்காக ஒருவருமில்லை.

[illegible] அப்படி ஆலோசனை செய்தபின்பு.

ஒழுங்கான நோட்டீஸ் கண்டு பேசி அழைக்கையிட்டழைக்கப் பட்டிருந்தும் சாட்சிகளாகிய தங்கராசு, மாணிக்கம், அப்துல் காதர் என்ற காதர் மைதீன், கிராஜூயாதர், இவர்கள் நீதியாரிடம் யாதொரு மன்னிப் பும் கோரவில்லை.

பொது நேத்தராணியவர்கள் நீதிக்கு ஆஜராகாத சாட்சிகள் மீது ஆஜர் குற்றம் பழுக்கமாத கேட்டுக் கொள்கிறார்.

இம் காரணங்களைப் பற்றி

கண்டனை முறையாயும் அப்பேல் சிவாதினம் வைத்தும் தீர்மானிக் கின்றான் நீதிக்கு ஆஜராகாத சாட்சிகளாகிய தங்கராசு, மாணிக்கம்,

P.T.O